# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,211 — 1921 ம் ஞு புரட்டாதிமீ 16 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

---

*அரசாட்சியாரின் விளம்பரம.*

---

### விளம்பரம்.

1892 ம் ஆண்டின் சிறுநகர சுகாதாரக் கட்டளைச்சட்டத்தின் 32 (1) ம் பிரிவின்கீழ், மன்னார்ச் சுகாதார சங்கம், 1892 ம் ஆண்டின் சிறு நகர சுகாதாரக் கட்டளைச்சட்ட ஒழுங்கு நடைபெறும் தலைமன்னாரின் எல்லைக்குள் குடியிருக்கும் 18 வயசுக்கும் 55 வயசுக்கும் உட்பட்ட ஒவ்வொரு ஆண்பிள்ளையும் வருடாந்தம் 6 நாள் வேலைசெய்யவேண்டும் அல்லது அவ்வேலை செய்வதற்குப் பதலாக ரூபா 1·50 கொடுக்கவேண்டும் என்ற வரியை விதித்து அதை அறவிடுவார்களென்று இத்தால் வெளியரங்கப்படுத்தப்படுகிறது.

அதி உத்தம தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்.
கொழும்பு, 1921 ம் ஞு ஆகஸ்டுமீ 22 ந் திகதி.

கிறேம் தொம்சன்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

---

1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 32 ம் பிரிவின் 2 ம் உபபிரிவின்கீழ் மன்னார் டிஸ்திறிக் சுகாதார சங்கத்தாரால் செய்துகொள்ளப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணங்கள் அதிகார சபையில் அதி உத்தம தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, 1911 ம் ஞு வைகாசிமீ 19 ந் திகதியைக்கொண்ட 6,442 ம் இலகக கசெற் பத்திரிகையில் பிரசுரித்த துணைப்பிரமாணங்களுக்குப் பதிலாகப் பிரசுரிக்கப்படுகின்றன.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ஞு ஆகஸ்டுமீ 22 ந் உ.

கிறெயிம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

1. இந்த ஒழுங்குகளின்படி கொடுக்கப்படவேண்டிய எல்லா அறிவித்தல்களும், சுகாதார சங்கத்தின் யோசனைப்படிக்கு அங்கிலேய, சிங்கள, அல்லது தமிழ்ப் பாஷைகளில் எழுதப்படவேண்டும். எவருக்காவது எழுதப்படும் அறிவித்தல்கள் அவரிடம் அல்லது அவர் வீட்டில் வசிக்குமாட்களில் ஒருவரிடம் கொடுக்கப்படவேண்டும் அல்லது அவர் வீட்டின் வெளியரங்கமான விடத்தில் ஒட்டப்படவேண்டும்.

2. சுகாதார சங்கம் பராபத்தியகாரரை தேள்வையான மட்டுக்கு நியமித்து, தகுந்ததென்று காணுகிற அவ்வளவு சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கும் ஒரு உத்தியோகஸ்தரை வேலையினின்றும் நிறுத்தி யின்னொருவரை அவருக்காக நியமிக்கவுங் கூடும்.

3. பராபத்தியகாரராக நியமிக்கப்படும் ஒவ்வொருவரும் அப்படி நியமிக்கப்பட்டபின் 10 நாளைக்குள் தங்களுக்குக் கொடுத்திருக்கும் வேலையைக் கிரமமாயும் நம்பிக்கையாயும் பார்க்கிறதற்காகச் சுகாதார சங்கத்தினால் தீர்மானிககப்படும் அவ்வளவு தொகைக்கு, மகத்துவந்தங்கிய இராசாவுக்கு அவர் உருத்தாளருக்கு அல்லது அவர் பின்னதிகாரிககு பிணை கொடுக்கவேண்டும். அந்தப் பிணை இத்தீவிலுள்ள அசைவற்ற ஆதனத்தை ஈடுகாட்டி எழுதுவதினால் அல்லது சுகாதாரச் சங்கம் நியமிக்கும்வண்ணம் காசு கட்டுவதினால் கொடுக்கப்படவேண்டும். அந்தப் பிணைமுறிககு முத்திரைச் செலவில்லை.

4. ஒவ்வொரு வீட்டுத்தலைவரும் அவர் வசிக்கும் பட்டணம் அல்லது கிராமத்தின் பராபத்தியகாரரினால் அல்லது அவருக்காக வேலைபார்ப்பவரினால், அவர் வீட்டில் வசிப்பவர்களின் தொகையையும் ஒவ்வொரு ஆண்பிள்ளையுடைய (வீட்

டுத்தலைவர் ஆண்பிள்ளையானால் அவருடையவும்) பெயர், வயது, தொழில் இன்னதென்று தெரிந்தமட்டில் ஒரு இடாப்பு எழுதிகொடுக்கும்படி கேட்கப்பட்டால், எழுதிகொடுக்கவேண்டும். வீட்டுத்தலைவர் எழுதத் தெரியாதவராய் இருந்தால், அந்த இடாப்பை எழுதுவதற்குத் தேள்வையான விபரங்களை எல்லாம் பராபத்தியகாரருக்கு அல்லது அவர் வதிலாளுக்குச் சொல்லவேண்டும். இப்படிச்செய்ய மறுதலிக்கும், அசட்டைபண்ணும், அல்லது அந்த இடாப்பில் எழுதவேண்டியதைப் பிழையாகச் சொல்லும் ஒவ்வொரு வீட்டுத்தலைவரும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்துக்கு உள்ளாவார்.

5. இதற்கு முந்தின ஒழுங்கிற் சொல்லிய விடாப்பை பராபத்தியகாரரொவ்வொருவரும் பவுத்திரப்படுத்தி காலத்துக்குக்காலம் சுகாதாரச்சங்கம் சொல்லுகிறபடி நடக்கவேண்டும். அந்த விடாப்பு அவருடைய பட்டணத்தில் அல்லது கிராமத்தில் வசிக்கும் வேலைசெய்யக் கடமைப்பட்ட ஒவ்வொருவரினும் ஞாயமான எல்லா நேரங்களிலும் பார்வையிடக்கூடியதாய் இருக்கவேண்டும்.

6. ஒவ்வொரு பராபத்தியகாரரும் அவர் அறவிடும் பட்டணம் அல்லது கிராமத்தின் எல்லைக்குள் வசிக்கும் வேலைசெய்யக் கடமைப்பட்ட எல்லாருடைய பெயர்களும் அடங்கிய விடாப்பை, மேற்சொல்லிய விடாப்பிலிருந்தும் அவருக்குத் தெரிந்த வேறு விஷயங்களில் இருந்தும் ஒவ்வொரு வருஷமும் எழுதி, அவர் கையொப்பமுள்ள கொப்பி ஒன்றை மார்கழிமாசம் 21 ந் திகதிக்கு முந்தி சுகாதாரசங்கக் கந்தோருக்கு அனுப்பவேண்டும். அந்த விடாப்பு, அது குறிக்கும் பட்டணம் அல்லது கிராமத்தில் அடுத்த வருஷம் தைமாசம் 31 ந் திகதிக்கு முந்தி சுகாதார சங்கத்தலைவர் குறிக்கும் வெளியரங்கமான இடத்தில் அதின் கொப்பி ஒன்றை ஒட்டுவதினால் பிரசித்தப்படுத்தப்படும். அந்தப் பிரசித்தம் ஒவ்வொருவருக்கும் அவர் வேலைசெய்யக் கடமைப்பட்டவர் என்று அறிவித்தல் கொடுக்கும்.

7. இதின் பின்னால் சொல்லப்படும் குற்றங்களில் எதையும் செய்யும் பராபத்தியகாரரெவரும் அந்தக் குற்றத்தின் கீழ் விபரித்திருக்கும் தண்டனைக்குள்ளாவார்:—

(a) சுகாதாரச்சங்கத்தின் கட்டளைப்படி அது குறிக்கும் காலத்துக்குள் அறவிட்ட பணத்தை ஒடுக்குவதில் அல்லது கணக்குக்காட்டுவதில் தவறுவாரானால் அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் அவர் கொடுக்கவேண்டிய பணத்தின் தொகைக்கு மும்மடங்குக்கு மேற்படாத தெண்டத்துக்கும், வேறும் கோட்டுச்செலவுகளுக்கும் உள்ளாவார்.

(b) அவருடைய வேலையைச்செய்வதில் அல்லது செய்யாமல் விடுவதில் வேணுமென்று களவுசெய்தால் அல்லது செய்யத்துணிந்தால், அல்லது அவர் பொறுப்பிலிருக்கும் அல்லது அவர் பொறுப்பில் வைத்திருக்கக் கடமைப்பட்டிருக்கும் புத்தகம், இடாப்பு, கணக்கு, முதலியவைகளைத் திருட்டுத்தனமாய் மாறறி, அழித்து, அல்லது இல்லாமற்போகப்பண்ணினால், அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும் அவரை விளங்கித்தண்டிக்கும் கோடு தீர்க்கும் தீர்ப்புக்குள்ளாவார்.

8. தலைவரிப்பணத்துக்காகச் செய்யப்படவேண்டிய வேலையைப் பொறுப்பெடுக்கிறதற்குத் தேள்வையான ஆட்களைச் சுகாதாரசங்கம் நியமிக்கும். அவ்வேலையைப் பொறுப்பெடுப்பவர், அந்த வருஷத்துக்கு வேலைசெய்யவேண்டியவர்கள் அவர்களுடைய வேலைகளைச் சரியாகப்பார்த்துமுடித்தால், வேலைசெய்துமுடித்துவிட்டார்களென்று நற்சாட்சிப் பத்திரங்கொடுப்பார். அந்தப் பத்திரத்தை வேணுமென்று கொடுக்கப்படவேண்டிவர்களுக்குக் கொடுக்க அசட்டைபண்ணும் அல்லது மறுதலிக்கும் ஒவ்வொருவரும் குற்றவாழியாகக் காணப்பட்டு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தெண்டத்துக்குள்ளாவார். ஒருவர் இன்னொருவருக்கு அவர் செய்யவேண்டிய வேலையைச் செய்ததாகக் காட்டும்படிக்கும், அல்லது வேறெந்த தூர்யோசனைக்காகவும் தன்னுடைய நற்சாட்சிப்பத்திரத்தைக் கொடுத்தால் அப்படிக் கொடுப்பவரும் அதை வாங்கித் தனக்குக் கிடைத்ததாகப் பாவிப்பவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்கள் விளங்கப்படும் கோடு தீர்க்கும் தீர்ப்புக்குள்ளாவார்கள்.

9. எந்த வேலைக்கும் பொறுப்புள்ள ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் சுகாதாரசங்கத்தின் கட்டளைக்கமைந்து அச்சங்கஞ் சொல்லுகிறபடிக்கு ஆர் அவ்வருஷத்துக்குச் செய்யவேண்டிய வேலையைச் சரியாய்ச் செய்தாரென்றும் ஆர் மறுதலித்து அல்லது அசட்டைபண்ணினாரென்றும் அவ்வூர் பராபத்தியக்காறனுக்குத் தெரிவித்துப்போட வேண்டும்.

10. யாதொரு பட்டணம் அல்லது கிராமத்தில் வசிக்கு மெவரும் வியாதி அல்லது சரீரமெலிவினால் வேலைசெய்ய வேலாதென்று சுகாதாரசங்கத் தலைவரின் மனத்திருப்திகுகு அத்தாட்சிப்படுத்தினால், அவர், சீவியகாலத்துக்கு அல்லது சங்கத்தலைவர் போதுமானதென்று நினைக்கு மவ்வளவு காலத்துக்கு அவரை வேலைசெய்யாது நீக்குதல் நீதிமுறையாயிருக்கும். சங்கத்தலைவரால் சீவியத்துக்கு அல்லது குறிககப்பட்ட காலத்துக்கு வேலைசெய்யாது நீக்கப்படாதிருக்கு மெவரும் இந்த வொழுஙகிலிருக்கும் எந்த ஞாயத்தினாலாவது, அல்லது 55 வயதுக்கு மேற்பட்டவர் அல்லது 18 வயதுக்குக் குறைந்தவரென்றாவது அப்படி நீக்கப்பட விரும்பும் அந்த வருஷத்துப் பங்குனிமாசம் 31 ந் திகதிக்கு முந்திச்சங்கத்தலைவரிடம் தன்னை நீககும்படி கேட்டுக்கொள்ள வேண்டும். சொல்லப்பட்ட காலத்துக்குள் கேட்காமலிருக்கு மெவரையும் சங்கத்தலைவர் அவ்வருஷத்துக்கு நீக்கிவிட மறுதலிக்கலாம்.

11. ஆறு மொழுங்கிற் சொல்லப்பட்ட விடாப்பிற் பதிந்திருக்கும் பெயருடைய ஒவ்வொருவரும் சங்கத்தலைவரால் அப்பெயர் அந்த விடாப்பினின்று மெடுக்கப்படாதிருந்தால், ரோட்டில் வேலைசெய்யக் கடமைப்பட்டவராவார். அந்த இடாப்பு, திருத்தப்படமுன் அல்லது திருத்தவேண்டியதிருந்தால் திருத்தப்பட்டதன்பின் அல்லது சங்கத்தலைவரின் கையொப்பத்துட னிருக்கும் இடாப்பின் கொப்பி அடக்கியிருககும் பெயர்வளிகாரரெவரும், முதலிடாப்பின் சரியான பிரதியல்லவென்று சுகாதாரசங்கத்துக்கு அத்தாட்சிப்படுத்தினாலொழிய வேலைசெய்யவேண்டியவர்களென்றதற்குக் கடைசியான அல்லது முடிவான சாட்சியாயிருக்கும்.

12. தேள்வையென்று காணில் ஆறுமொழுங்கின் சொல்லியபடி, ஒரு அனுபந்த இடாப்பை எழுதலாம். எந்த வருஷத்திலும் சித்திரை௴ 30 ந் திகதிக்குப் பிந்தாமல் அந்த அனுபந்த இடாப்புப் பிரசித்தப்படுத்தப்பட வேண்டும். அது அந்த வருஷம் பங்குனிமாசம் 31 ந் திகதி அவ்வூரில் வசிக்காத ஒருவரின் பெயரையும் அடக்கியிருககப்படாது.

13. அவ்வண்ணம் பிரசித்தப்படுத்தப்பட்ட எந்த அனுபந்த இடாப்புக்கும், ஆறுமொழுங்கின் கீழ் பிரசித்தப்படுத்தப்பட்ட இடாப்புப்போல் இயன்ற அளவுக்கு இடாப்பைக் குறித்த ஒழுங்குகளெல்லா மமையும்.

14. வேலைசெய்பவேண்டிய எவனும் ஞாயிற்றுக்கிழமையிலும் வளமையாய் வேலைசெய்யப்படாத நேரங்களிலும் வேலைசெய்யும்படி கேட்கப்பட மாட்டான்.

15. சுகாதாரசங்கத்தலைவரின் கட்டளைக்கு ஒவ்வொரு பராபத்தியகாரரெவரும், இதன்பின்னால் சொல்லியபடி தலைவரிப்பணங் கொடுக்காமல் அவருடைய பகுதியில் வசிக்கும் ஒவ்வொருவரும் சஙகத்தலைவரினாற் குறிககப்படும் காலத்திலு மிடத்திலும் அவ்வேலையைச்செய்யும்படி சனங்களை வந்துகூட நியமிக்கும் தினத்துககுக் குறையாம லேழுநாளைக்கு முந்தி பறையடிப்பித்துப் பிரசித்தப்படுத்துவதினால், வேலைசெய்யக் கடமைப்பட்டவரென்று அறிவித்தல் கொடுப்பார். இருபத்திரண்டா மொழுங்கிற் சொல்லியபடி தலைவரிப்பணங் கொடுக்கவிடப்பட்டிருக்கும் நாள் பிந்திப் போகுமட்டும் மேற் சொல்லிய அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

16. இதன் பின்னாற் சொல்லப்படும் விதமாய்த் தலைவரிப்பணங் கொடாமல் வேலைசெய்பவேண்டிய எவரும் அவரே யத்தாட்சிப்படுத்தவேண்டிய ஞாயமான சாட்டில்லாமல் அதற்காகக் குறிக்கப்படும் காலத்திலு மிடத்திலும் வேலைசெய்ய அல்லது இதன்பின்னாற் சொல்லிபபடிக்குப் பணங்கொடுககத்தவறினால், அவர் வசிக்கும் பட்டணம் அல்லாது கிராமத்தின் பிரசித்த தெரு அல்லது குளத்தில் முதற் செய்பவேண்டிய அளவுக்கு இரண்டுபங்கு நாட்களில் வேலைசெய்யக் கடமைப்படு மெவரும் இதன்பின்னாற் சொல்லியபடி தலைவரிப்பணங் கொடுத்துவிடலாம்.

17. இந்த ஒழுங்குகளின்படி வேலைசெய்யப்போகு மெவரும், அவரே அத்தாட்சிப்படுத்தவேண்டிய ஞாயமான சாட்டில்லாமல் வேலைசெய்யவேண்டிய நேரத்திற் செய்யாவிடில், அவ்விடத்திலிராவிடல், குடிவெறியாயிருந்தால் வேறு மென் நசட்டைபண்ணினுல் வேலையை நடப்பிக்கு முத்தியோகஸ்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படியாம லிருந்தால், அவரிட மொப்படைக்கப்பட்ட வாயுதங்களைப் பாதுகார்க்காவிட்டால், அல்லது வேறேதுந் துர்நடத்தை நடந்தால், சுகாதாரச் சங்கத்தலைவரினுல் மேற்சொல்லிய ஏதுமொரு குற்றத்துக்காக மூன்று நாளைக்கு மேற்படாத காலத்துக்கு மேலதிகமாய் வேலைசெய்யும்படி தீர்ப்புப்பண்ணப்படுவார். இந்த ஒழுங்கின் கீழ் ஒருவரின்மேற் போடப்படும் மொத்தக்குற்றம் ஆறு நாள்வேலைக்கு மேற்படமாட்டாது.

18. அறிவித்தல் கிடைத்ததின்பின் பதினுரு மொழுங்கின்படி யிரட்டிப் பங்குவேலையையும், பதினேழா மொழுங் கின்படி மேலதிகமான வேலையையும் செய்யத்தவறும், அசட்டைபண்ணும், அல்லது மறுதலிக்குமெவரும் குற்றவாளியா கக்காணப்பட்டு, பத்தொன்பதா மொழுங்கிற் சொல்லிய தண்டனைக்குள்ளாவார் அவர் மேற்சொல்லியபடி வேலைசெய்ய வேண்டிய பட்டணம் அல்லது கிராமமுள்ள பகுதியின் சுகாதார சங்கத்தலைவர் வேலைசெய்யத்தவறுபவர்கள் தன் முன் வந்து வெளிப்படாவிடில், அவர்களைப் பிடிப்பதற்கு விருந்துவிடத் தத்துவமுள்ளவராயிருக்கிறுர். அப்படிப்பட்ட ஒவ் வொரு விருந்திலுஞ் சொல்லப்பட்டவர், அது கொடுக்கப்படுமாள், பொலிசு தலைமைக்காரன், பிசுக்கால், அல்லது பிசுக் கால் சேவகனுல் பிடிக்கப்படுவான்.

19. இந்த வொழுங்குகளின்படி பிடிக்கப்படுமெவரும், விருந்திற் சொல்லிய பிரகாரம் சுகாதாரச் சங்கத்தலைவர் முன்னிலையிற் றுமதமின்றிக் கொண்டுபோகப்பட்டு, அவர் அந்த விருந்திற் சொல்லிய ஆள் பிடிபட்டவர்தானென்றும் அதிற் சொல்லப்பட்ட குற்றம் அவராற்றுன் செய்யப்பட்டதென்றும் தன்னை மனரெம்பியப்படுத்தினதின்பின் ஒரு மாதக் கடூழிய மறியல் விதிக்கப்படுவார். சங்கத்தலைவர் அவர் யோசனைப்படிக்கு அப்படிப்பட்ட ஆளை மறியலில் வைப் பதற்குப் பதிலாய்ப் பத்து ரூபாய் தெண்டங்கொடுக்கும்படி தீர்ப்புப்பண்ணலாம். அந்தத் தெண்டத்தை உடனே கொ டுத்தாலும் அல்லது சங்கத்தலைவர் குறிக்குங் காலத்துக்குள் கொடுத்தாலும் மறியலில்வைக்கப்படமாட்டார். மற்றப்படி போடப்பட்ட தெண்டங் கொடுக்கமுன் விடுதலைபண்ணப்பட்டால் தேள்வையானுல், அவரைப் பிடிப்பதற்காக ஒரு விருந்து விடக்கூடும். ஒருவர் மறியலில் வைக்கப்பட்டபின் தெண்டத்தைக் கொடுப்பாராகில் அவரை மறியலில்நின்றும் நீக்குதல் சுகாதாரச்சங்கத்தலைவருக்கு நீதிமுறையாயிருக்கும். இந்த ஒழுங்கின்படி சங்கத்தலைவர் செய்யுந் தீர்ப்புக்கு அப் பல் கிடையாது. இந்தத் தெண்டப்பணம் கவர்ணமேந்துக்குக் கொடுக்கப்படும்.

20. இந்த ஒழுங்குகளின்படி விடப்படும் விருந்துகளையும், அந்த விருந்து விடுவதற்கான ஞாயத்தையும், அதினுற் பிடிக்கப்படும் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் தெண்டனைகளையும் பதிந்துள்ள ஒரு புத்தகம் சுகாதாரசங்கத் தலைவரி னுல் வைத்திருக்கப்படும்.

21. இந்த ஒழுங்குகளின்படி மறியற்றீர்ப்பிடப்பட்ட எவரும் கோட்டினுல் தீர்ப்புப்பண்ணப்படுபவரைப்போல மறியலில் வைக்கப்படுவார்.

22. இந்த ஒழுங்குகளின்படி இரண்டு பங்கு அல்லது மேலதிகமான வேலைசெய்யக் கடமைப்பட்டிராத எவரும், எந்த ஒரு வருஷத்துக்கு அவர் செய்யவேண்டிய வேலைக்காக அவர் வசிக்கும் பட்டணம் அல்லது கிராமத்தில் சுகாதாரச் சங்கம் காலத்துக்குக்காலம் கொடுக்கும்படி திட்டம்பண்ணும் அத்தொகைப் பணத்தைக் கொடுத்தல் நீதிமுறையாயிருக் கும். இரண்டு பங்கு வேலைசெய்யக் கடமைப்பட்டவரெவரும், இரண்டு பங்கு வேலைசெய்ய வேண்டுமென்று அறிவிக்கப் படுந் தினத்துக்கு முந்தி எந்த நேரத்திலாகுதல் அந்தப் பட்டணம் அல்லது கிராமத்தி லறவிடப்படும் இரட்டிப் பங்கு தலை வரிப் பணத்தைக் கொடுத்தல் நீதிமுறையாயிருக்கும்.

23. (1) அவர் செய்யவேண்டிய வேலைக்காகக் காசு கொடுக்க விரும்பு மெவரும், ஒவ்வொரு வருஷமும் பங்குனி மாசம் 31 ந் திகதியிலன்று அல்லது அதற்கு முந்திக் காசைக் கொடுக்கவேண்டும். அந்தத் திகதி வரைக்குமொருவர் 16 ம் ஒழுங்கிற் சொல்லிய தண்டனைக் குள்ளாகமாட்டார்.

(2) வேலைசெய்வதற்குப் பதலாகக் கொடுக்கவேண்டிய தொகை ஒவ்வொருவருக்கும் ரூபா 1 சதம் 50.

24. ஆருங் கொடுக்க வேண்டிய தலைவரிப்பணத்தை அவர் வசிக்கும் பட்டணம் அல்லது கிராமத்தில் பராபத்திய காரரிடம் அல்லது சுகாதார சங்கத்தலைவரிடம் கொடுக்க வேண்டும் அவர்கள் அதற்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுக்கும் பணம் மகத்துவந்தங்கிய இராசாவுக்குக் கொடுத்ததாகக் கவனித்து ஏற்றுக்கொள்ளப்படும்.

25. பராபத்தியகாரரினுல் அல்லது சுகாதாரசச்சங்கத் தலைவரினுல் கொடுக்கப்பட்ட பற்றுச்சீட்டை எவரொருவர் வேறொருவருக்கு அவர் கொடுக்கவேண்டிய காசைக் கொடுத்ததற் கத்தாட்சியாகப் பாவிக்கும் நோக்கமாக அல்லது வே றேதுந் துர்விஷயத்துக்காக கொடுத்தாலும் அல்லது எவரொருவர் பராபத்தியகாரரினுல் அல்லது சுகாதாரச் சங்கத்தலை வரினுல் வேறொருவருக்குக் கொடுக்கப்படும் பற்றுச்சீட்டை அணுப்பும் நோக்கமாகத் தனக்குக் கொடுத்ததாகப் பாவித் தால், இருவரும் அல்லது ஒவ்வொருவரும் குற்றவாளியாகக் காணப்பட்டு அவர்கள் விளங்கப்படும் கோடு தீர்க்கும் தீர்ப்புக்குள்ளாவார்கள்.

26. இந்த ஒழுங்குகளுக்கு விரோதமாகச் செய்யப்படும் ஒவ்வொரு குற்றமும் அது செய்யப்பட்ட இடத்துக்குரிய பொலிசுக் கோட்டினுல் விளங்கித் தீர்ப்புச் சொல்லப்படலாம்.

27. இந்த ஒழுங்குகளின்படி செய்யப்படவேண்டிய வேலையைச் செய்வித்து, தலைவரிக்காகக் கொடுக்கப்படும் பணத்தைச் செலவழித்து முழுதையும் நடப்பித்து மேற்பார்வையிடு முரித்துச் சங்கத்துக்குரியது. அந்தச் சங்கத்துக்கு, தலைவரிப்பணத்தை 1892 ம் ஆண்டின் சிறு நகர சுகாதாரச்சட்டப்படிக்கு நடத்தப்படுகிற மன்னுர் டிஸ்த்திறிக்கிலுள்ள பல பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் பிரித்துக்கொடுத்தல் நீதிமுறையாயிருக்கும்.

---

## காணி விற்பனவுகள்.

---

**No. 1,537, E. P.**—1921 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 1 ந் திகதி, செவ்வாய்க்கிழமையும் அடுத்த நாட்களிலும் காலை 9 மணிக்கு கீழ் மாகாண அரசாட்சி ஏசன்றுத்துரை அவர்கள் வாழைச்சேனைக் கிராமகோட்டு வீட்டிலிருந்து இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகா ரம் ஏலத்திற்கூறி விற்பனவு அல்லது உருத்துச்சோந்தைப் பிரகாரம் தீர்வை அல்லது வேறேவிதமாகக் கடவைப்படுத் தல் செய்வார். கீழ் மாகாணத்து மட்டுக்களப்பு டிஸ்திறிக்கின் கோறளைப்பற்றிலுள்ள நூற்றொரு காணித்துண்டுகள்.

1 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமப்படம். குறிச்சி—சூடுபத்தின சேனைக்கண்டம்.
வாகந்திக்குளத்தால் தண்ணீர்பாயக்கூடியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | | கூட்டிப்பிடித்தவரின் பெயர். | | விபரம். | | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | சோதையன்கட்டுக்காடு | .. | அவக்கர் ஆதம்வாவா | .. | நெற்காணி | .. | 18 3 36 |
| 39 | சூடுபத்தினசேனை | .. | பிச்சைக்கண்டு முகையதின்வாவா | .. | வளவு | .. | 4 3 29 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரரின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 39½ | சூடுபத்தினசேனை | பிச்சைக்கண்டு முகையதின்வாவா | நெற்காணி | 2 | 3 | 25 |
| 215 | கஞ்சம்வெளிவயல் | வாவாலெவ்வை அகமதுலெவ்வை | ஷை | 18 | 1 | 13 |
| 215A | ஷை | ஷை | ஷை | 2 | 1 | 33 |

2 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமப்படம். குறிச்சி—பட்டியடிவெளிக்கண்டம்.
வாகநதிக்குளத்தால் தண்ணீர்பாயக்கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | சோதையன்கட்டுப்பூமி | முகமதுத்தம்பிப்போடி இஸ்மாயில் லெவ்வையும், (2) முகமதுக்கானும் | நெற்காணி | 1 | 2 | 23 |
| 20 | வடலவள | (1) ச. பொ. த. தம்பிநயினரும் (2) வ. கணவதியும், (3) ஆ. சின்னத்தம்பியும் | — | 0 | 1 | 11 |

3 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமப்படம். குறிச்சி—வெட்டுக்கர்ட்டு வெளிக்கண்டம்.
வாகநதிக்குளத்தால் தண்ணீர்ப்பாயக்கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 73A | பெண்டுகள்மடு | உ. அகமதுலெவ்பை வன்னியன் | நெற்காணி | 3 | 0 | 3 |
| 114 | தரசேனை | த. உ. மம்மது இஸ்மாலெவ்வை | ஷை | 0 | 3 | 17 |
| 115 | ஷை | அ. முகையதீன்வாவா | ஷை | 7 | 2 | 1 |
| 117 | ஷை | ஷை | ஷை | 0 | 1 | 18 |
| 140A | இலகவெளி | ம. மம்மது முஸ்தாப | ஷை | 0 | 2 | 20 |
| 143A | மணற்பங்கு | சின்னத்தம்பி அகமதுலெவ்வை | ஷை | 2 | 1 | 12 |
| 265A | வெட்டுக்காட்டுவெளி | அ. பிச்சைக்கண்டு | ஷை | 1 | 2 | 27 |
| 265B | ஷை | ஷை | ஷை | 1 | 3 | 12 |
| 265C | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 39 |
| 267 | ஷை | ஷை | ஷை | 3 | 3 | 35 |
| 275A | வெட்டுக்காட்டுஇலகவெளி | ஒ. சமுன்லெவ்வையும் ம. முஸ்தாபாவும் | ஷை | 5 | 3 | 34 |
| 320 | பள்ளிமடுக்காடு | அ. பொ. அகமதுலெவ்வை | ஷை | 0 | 0 | 24 |
| 341 | பொருக்கன் வெளித்திடல் வயல் | உ. கவிவுலெவ்வை | ஷை | 1 | 2 | 19 |
| 348 | ஷை | ம. அகமதுலெவ்வைப்போடி | ஷை | 1 | 0 | 24 |
| 362 | கோந்தாளப்போடியார்வெளி | ம. அகமதுலெவ்வையும் கிராம நீதிவான் வேல்முருகு முதலியாரவர்களும் | ஷை | 1 | 3 | 37 |
| 363 | கோந்தாளப்போடியார்வெளி | செயிலான்கண்டு இஸ்மாயில்லெவ்வை | நெற்காணி | 2 | 3 | 33 |
| 376 | குடாவயல் | ம. அகமதுலெவ்வைப்போடி | ஷை | 1 | 1 | 24 |

4 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமமடம், குறிச்சி—தவணைக்கண்டம். வாகநதிக்குளத்தால் தண்ணீர் பாயக்கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7A | எருக்கலன்காட்டுச்சேனை | அ. முகமது அலி ஆஜீயார் | நெற்காணி | 4 | 1 | 39 |
| 16A | மக்குளானை | இ. ஆதம்வாவா | ஷை | 3 | 2 | 25 |
| 21 | மக்குளானைப்புரையடி | ஷை | ஷை | 3 | 2 | 13 |
| 85A | சாளம்பையடிமுன்மாரி | அ. ம. உமறுலெவ்வை | ஷை | 0 | 3 | 5 |
| 104 | பொருக்கன்முன்மாரி | க. வீரகத்தி | ஷை | 2 | 1 | 31 |

5 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமபடம் குறிச்சி—ஒட்டுவெளிக்கண்டம்.
வாகநதிக்குளத்தால் தண்ணீர் பாயக்கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3A | பொருக்கண்டகுளம் | உ. தாமோதரம்பிள்ளை | நெற்காணி | 3 | 2 | 23 |
| 14B | கிளாக்கல்சேனை | இ. முகையதின்வாவா | ஷை | 1 | 3 | 5 |
| 37A | படையாண்டவட்டை | உ. அகமதுலெவ்வை | ஷை | 0 | 0 | 20 |

6 ம் இலக்க நீர்ப்பாய்ச்சல் பிரதமப்படம். குறிச்சி—வெள்ளாளவெளிக்கண்டம்.
வாகநதிக்குளத்தால் தண்ணீர் பாயக்கூடியது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | கட்டையடிமடு | சுக்கிரிபன் அருணகிரி | வளவு | 0 | 3 | 18 |
| 3A | ஷை | சடையர் பெரியதம்பி | பாழ்நிலம் (கூட்டிப்படிக்கப் பட்டிருந்தது. இப்போ இல்லை | 0 | 1 | 15 |
| 13A | ஷை | அ. ம. செ. காதர்சாய்வு | நெற்காணி | 0 | 1 | 13 |
| 14A | ஷை | வ. வி. நாகப்பர் | ஷை | 0 | 1 | 0 |
| 15 | ஷை | கண்ணப்பர் குப்பையப்போடி | ஷை | 3 | 1 | 38 |
| 18A | சாராயவெளித்திடல் | மிருவோடையிலிருக்கும் கண்டுசாமித்தம்பி (கேள்விக்காரன்) | வளவு | 0 | 3 | 36 |
| 18C | அரசடிக்குடாக்காடு | தீர்வைசெய்வதற்கு | காடு | 0 | 0 | 29 |
| 18D | ஷை | ஷை | காடு | 9 | 3 | 26 |
| 18E | அரசடிக்குடாவயல் | சந்திவெளியிலிருக்கும் பாலிப்போடி சீனித்தம்பி ஒப்பத்தில் செய்கை பண்ணியது (தீர்வைசெய்வதற்கு) | நெற்காணி | 3 | 3 | 21 |
| 22 | இலுப்புஒடைமுன்மாரிவில்லா | க. மாரிவேடன் | வளவு | 0 | 3 | 16 |
| 24 | செம்பாபோட்டமுன்மாரி | காட்டுவாவா அலி | வளவு (கூட்டிப்பிடிக்கப்பட்டுத்தற்காலம் விடப்பட்டது) | 1 | 2 | 5 |
| 44A | நடுத்தவணை | கதிராமர் வேலுப்பிள்ளை செய்கை பண்ணியது | வளவு (இப்போ செய்கை பண்ணவில்லை) | 0 | 3 | 13 |
| 56 | உப்புத்தோட்டம் | கொம்பர் கணபதி | வளவு | 0 | 1 | 35 |
| 57 | உப்புத்தோட்டம்சேனை | ஆண்டியர் தம்பிமுத்து | சேனை | 1 | 1 | 3 |
| 58 | உப்புத்தோட்டம்பள்ளப்பூமி | சடையர் கறுவல்தம்பி | சேனை | 1 | 3 | 18 |

| காணித் துண்டின் இல. | காணியினது பெயர். | கேள்விக்காரன் பெயர் | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 59 | உப்புத்தோட்டம்வயல் | வேலாயுதன் குமாரவேலுவும் கண்ணைப்பர் முருகேசுவும் | நெற்காணி | 5 | 3 | 0 |
| 60 | சாராவெளித்திடல்பூமி | பத்தன் கறுவல் | வளவு | 0 | 3 | 6 |
| 78 | முருக்கன்தீவுவாடிப்பூமி | கதிரேசு சீனி | தென்னைமரவளவு (கூட்டிப் பிடிக்கப்பட்டு இப்போ விடப்பட்டது) | 1 | 0 | 9 |
| 85 | நெடியமடுப்பூமி | சின்னத்தம்பி சின்னவன் | வவுவு ( ஷை ) | 0 | 3 | 32 |
| 88 | பிறம்படித்தீவுத்திடல்வாடிப் பூமி | சின்னத்தம்பி கணவதி | வளவு | 1 | 1 | 0 |
| 89 | பிரம்படி தீவுககாடு | ஆண்டியர் முத்தன் | சேனை (கூட்டிப்பிடிக்கப்பட்டு இப்போ விடப்பட்டது) | 3 | 2 | 9 |
| 93 | உப்புத்தோட்டம் | வேலாயுதன் குமரயன் | வளவு | 0 | 0 | 33 |
| 94 | ஷை வயல் | ஷை கண்ணப்பர் முருகேசு | நெற்காணி | 0 | 2 | 38 |
| 96A | உப்புத்தோட்டவயல் | ஆண்டியர் தம்பிமுத்து | ஷை | 1 | 0 | 1 |
| 109 | உப்புத்தோட்டம்வாடிப்பூமி | ஆண்டியர் முத்தன் | வளவு (கூட்டிப்பிடிக்கப்பட்டு இப்போ விடப்பட்டது) | 0 | 2 | 7 |
| 117A | அரசடிக்குடாக்காடு | தீர்வைசெய்வதற்கு | காடு | 9 | 0 | 33 |
| 118 | ஆலையடிமுன்மாரி | ஈசாலெவ்வை நெயினுமுகம்மது | நெற்காணி (கூட்டிப்பிடிக்கப்பட்டு இப்போவிடப்பட்டது) | 5 | 2 | 39 |
| 120 | அரசடிக்குடா | கணபதி கந்தன்போடி | வளவு | 0 | 2 | 32 |
| 121 | ஷை | கணபதி கந்தன்போடி, பெ. காத்தமுத்து, வ. கணபதி, பி. சீனித்தம்பி, க. இலங்கப்பன்; ச. கணபதி, க. முருகன் | நெற்காணி | 53 | 0 | 17 |
| 122 | ஷை | ஷை | ஷை | 13 | 0 | 30 |
| 124 | வட்டிபோட்டமடு | கந்தன் கணபதி | சேனை | 1 | 0 | 8 |
| 125 | ஷை | சின்னவர் கந்தன் | சேனை | 1 | 0 | 14 |
| 126 | பொண்டுகள்சேனை | கணபதி சின்னப்பிள்ளை | நெற்காணி | 1 | 0 | 5 |
| 127 | வட்டிபோட்டமடு | மாப்பன் கணபதி | சேனை | 0 | 3 | 7 |
| 140 | இலுப்பையடிமுன்மாரிவில்லா | கந்தன் வேலன் | வளவு | 0 | 0 | 36 |
| 151 | இலுப்பையடிமுன்மாரி | வேலாச்சி கறுவல்போடி | நெற்காணி | 3 | 3 | 13 |
| 152A | ஆனைசுட்டபொத்தானை | ஷை | ஷை | 0 | 2 | 16 |
| 154A | ஷை | சீனியர் கணபதிப்பிள்ளை | ஷை | 1 | 2 | 25 |
| 161 | வட்டிபோட்டம்டுமுன்மாரி | மூலிட கணபதி | நெற்காணி (கூட்டிப்பிடிக்கப்பட்டு இப்போ விடப்பட்டது) | 4 | 0 | 21 |
| 171 | கூளாவடிமுன்மாரி | வயிரவி அருணகிரி | ஷை ( ஷை ) | 3 | 0 | 3 |
| 172 | சடைவாக்கடிமுன்மாரி | வேலாச்சி சின்னத்தம்பி | ஷை | 3 | 1 | 5 |
| 173 | சாளம்பையடிமுன்மாரிவாடிப் பூமி | கணபதி இளையதம்பி | வளவு | 0 | 0 | 20 |
| 178 | சாளம்பையடிமுன்மாரி | கணபதி இளையதம்பி | நெற்காணி | 4 | 2 | 25 |
| 180B | சடவாக்கடிமுன்மாரி | வேலாச்சி சின்னத்தம்பி | ஷை | 0 | 0 | 5 |
| 181A | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 4 |
| 192 | மூட்டுக்குளம்வயல் | கண்ணப்பர் அம்பியபாகர் | ஷை | 2 | 0 | 27 |
| 193A | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 38 |
| 232 | காட்டுக்கட்டுவயல் | சாமிப்போடி முருகன் | ஷை | 4 | 3 | 13 |
| 233 | கடையாக்கடிமடுவயல் | கண்ணுசாமி | ஷை | 7 | 2 | 22 |
| 245A | உறுமுடிஞ்சதோட்டம்வயல் | உருத்தாளி தெரிபடவில்லை | நெற்காணி (தற்சமையம் விடப்பட்டிருக்குது) | 0 | 0 | 39 |
| 250 | சாளம்பையடிமுன்மாரி | பீற்றர் சேவியர் | ஷை | 1 | 1 | 4 |
| 252A | சாளம்பையடிமுன்மாரி | பீற்றர் சேவியர் | நெற்காணி | 1 | 2 | 27 |
| 252B | ஷை | ஷை | ஷை | 0 | 1 | 30 |
| 254 | ஷை | ஷை | ஷை | 4 | 0 | 8 |
| 267 | சரையாக்கடிமுன்மாரி | பீற்றர் நாகலிங்கம் | ஷை | 1 | 1 | 1 |
| 289A | ஆனைசுட்டபொத்தானை | ச. ஐயாத்துரை செய்கைபண்ணியது | ஷை | 4 | 2 | 2 |
| 289B | ஷை | ஷை | ஷை | 0 | 3 | 18 |
| 289C | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 8 |
| 290 | ஷை | சித்திரன் அன்னப்பிள்ளை | வளவு | 0 | 0 | 39 |
| 291 | ஷை | ச. ஐயாத்துரை செய்கைபண்ணியது | வளவு (இப்போ செய்கை பண்ணப்படவில்லை | 0 | 2 | 26 |
| 296 | ஆத்துவெட்டைவயல் | தன்மர் கந்தப்பன் செய்கைபண்ணியது | நெற்காணி | 1 | 3 | 24 |
| 297 | ஷை | ஷை | ஷை | 5 | 1 | 36 |
| 299 | குமரேசன்கட்டுவாடி | கந்தப்பர் அம்பியைபாகரும் நொ. க. குளந்தைவேலுவும் | வளவு | 0 | 2 | 23 |
| 315 | சின்னமுன்மாரிவாடி | வயிரமுத்து கனகசபை | வளவு | 0 | 2 | 3 |
| 316A | சின்னமுன்மாரி | ஷை | நெற்காணி | 0 | 1 | 6 |
| 370 | கொக்குநாரைவட்டவான் வயல் | காசி கோபாலி | நெற்காணி (இப்போ விடப்பட்டது) | 3 | 0 | 1 |
| 371 | ஷை | நாகப்பர் முத்துக்குமாருவும் சின்னக்கந்தர் சின்னையாவும் | ஷை | 7 | 1 | 33 |

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ | ப. |
|---|---|---|---|---|---|---|
| 373 | கொக்குநாரைவட்டவான் தோட்டம்காலை .. | நாகப்பர் முத்துக்குமாரு .. | வளவு .. | 1 | 0 | 31 |
| 382A | விளாங்காட்டுவெளி .. | வே. கனகசபையும் க. ஐயம்பிள்ளையும் | நெற்காணி .. | 0 | 1 | 17 |

இக்கண்டங்களின் தரிப்புவிலை விற்பனவுநேரத்தில் அறிவிக்கப்படும்.

இக்கண்டங்களுக்கு வாகநதிக்குளத்தால் தண்ணீர்பாயும். 1925 ம் வருஷம் வரைக்கும் நீர்வரி அறவிடப்படமாட்டாது. அந்த வருஷமிருந்து அரசாட்சியாரால் தீர்மானிக்கப்படும் நீர்வரியை இறுக்கவேண்டியவர்களாவார்கள்.

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 14 ந் உ.

இறேய்ம் தொம்ஸன்,
கலோனியல் சக்கிறுத்தார்.

---

**No. 1,533, E. P.**—1921 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3 ந் திகதி, வியாழக்கிழமை காலை 10 மணியளவில் தன் ஆபிசில் கீழ் மாகாணத்து உதவிக் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 53 காணித்துண்டுகள் கீழ் மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக் திரிகோணமலைப் பட்டணம் கட்டுக்குளம் கிழக்கும் மேற்கும் தம்பலகாமப்பகுதிகளிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 5,564. குறிச்சி—சல்லி. உரித்தாளி—முடிக்குரியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கோவில்வளவு அல்லது மலப்பிட்டியா | எம். ஐயம்பிள்ளையும் ற பொன்னையா | பார்நிலமும் குடிசைகளும் .. | 0 | 1 | 14 | 25 |
| 2 | ஷை .. | ஷை .. | வழிக்காய் விடப்பட்ட நிலம் .. | 0 | 1 | 17 | —* |
| 3 | ஷை .. | எம். வேலுப்பிள்ளை .. | பலாமரத்துக்குத்தகுந்த பார் நிலம் | 1 | 1 | 32 | 25 |

பிளான் இலக்கம் 5,610. குறிச்சி—மாங்கணாய். உரித்தாளி—முடிக்குரியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஐயன்குடாக்காடு .. | கே. ஆசைப்பிள்ளை .. | தென்னைக்குத் தகுந்தது .. | 4 | 0 | 1 | 45† |
| 2 | ஐயன்குடாக்காடு அல்லது மாங்கணாய்க் காடு | பொதுவிற்பனை .. | ஷை .. | 5 | 1 | 18 | 45† |
| 2A | மாங்கணாய்க் காடு .. | வீ. சிதம்பரப்பிள்ளை .. | ஷை ... | 1 | 0 | 15 | 45† |
| 3 | ஐயன்குடாக்காடு அல்லது மாங்கணாய்க் காடு | — .. | தெருவுக்குவிடப்பட்ட நிலம் .. | 1 | 1 | 32 | —* |

பிளான் இலக்கம் 5,354. குறிச்சி—நிலாவெளி. உரித்தாளி—முடிக்குரியது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | ஏ. | றூ. | ப. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | தம்பாப்பி தோட்டம் .. | — .. | தெருவுககாய் விடப்பட்ட நிலம் | 0 | 2 | 33·1 | —* |
| 4 | ஆபிரகாம் தோட்டம் .. | — .. | ஷை .. | 0 | 0 | 5·1 | —* |
| 5 | க. மு தோட்டன் .. | — .. | ஷை .. | 0 | 0 | 1·5 | —* |
| 6 | மெடவேஎஸ்றறேற் .. | — .. | ஷை .. | 0 | 0 | 26·7 | —* |
| 7 | கணக்கப்பிள்ளை தோட்டம் | — .. | ஷை .. | 0 | 0 | 1 | —* |
| 8 | ஷை .. | — .. | ஷை .. | 0 | 0 | 0·7 | —* |
| 9 | காசிநாதர்வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 3 | —* |
| 10 | குருக்கள்தோட்டம் .. | — .. | ஷை .. | 0 | 0 | 1·2 | —* |
| 11 | ஷை .. | — .. | ஷை .. | 0 | 0 | 2·5 | —* |
| 12 | செட்டியார்புலவு முருகன் வளவு | — .. | ஷை .. | 0 | 0 | 5·8 | —* |
| 13 | வெள்ளயனவளவு இலையான் வளவு கோணன்வளவு | — .. | ஷை .. | 0 | 0 | 1·8 | —* |
| 14 | பொன்னன்வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 2 | —* |
| 15 | வெள்ளையன்வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 1·2 | —* |
| 16 | ஆறுமுகத்தான் வளவு .. | — .. | தெருவுககாய் விடப்பட்ட நிலம் | 0 | 0 | 2·2 | —* |
| 17 | செல்லன்வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 2·5 | —* |
| 18 | சிற்றம்பலம் வளவு .. | — .. | ஷை ... | 0 | 0 | 4·8 | —* |
| 19 | வன்னியனார் வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 7·2 | —* |
| 20 | கோவில்த்தோட்டம் .. | — .. | ஷை .. | 0 | 0 | 5·5 | —* |
| 21 | பணியடிவளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 8·2 | —* |
| 22 | கந்தப்பன் வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 1 | —* |
| 23 | முத்தர் சண்முகம் வளவு .. | எம் சண்முகத்தால் கூட்டியடைத்த காணி | குடிநிலமும் தென்னந்தோட்டமும் | 0 | 0 | 23·7 | 30 |
| 24 | முடக்குத்தோட்டம் .. | — ... | தெருவுக்காய் விடப்பட்ட நிலம் | 0 | 0 | 2·5 | —* |
| 25 | ஷை .. | — .. | ஷை .. | 0 | 0 | 10·1 | —* |
| 26 | கனகசபை வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 4·1 | —* |
| 27 | கணபதிப்பிள்ளை வளவு .. | — .. | ஷை .. | 0 | 0 | 4·1 | —* |
| 28 | பெரியதம்பி வளவு கோணாமலை வளவு | — .. | ஷை .. | 0 | 0 | 29·1 | —* |
| 29 | சின்னத்தம்பி முகம்மது வளவு | — .. | ஷை .. | 0 | 0 | 34·6 | —* |
| 30 | மரக்காயர்தம்பி வளவு .. | — .. | ஷை .. | 0 | 1 | 14·4 | —* |
| 31 | நாகமுத்து வளவு .. | — .. | ஷை .. | 0 | 1 | 2·1 | —* |
| 32 | அல்லாப்பிச்சைவளவு .. | — .. | ஷை .. | 0 | 1 | 5·5 | —* |

| காணித் துண்டின் இல. | காணியினது பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | று. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 33 | கதிரவேலு வளவு .. | — .. | தெருவுக்காய் விடப்பட்ட நிலம் | 0 | 1 | 35·3 | —* |
| 34 | தெருப்பூமி .. | — .. | ஷை .. | 0 | 1 | 0·7 | —* |
| | பிளான் இலக்கம் 5,072. குறிச்சி—கோமரசங்கடவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | தம்பக்காவெல .. | கே. றங்காமி .. | நெல்லுக்குத்தகுந்த காடு .. | 1 | 2 | 10 | 20‡ |
| | பிளான் இலக்கம் 5,585. குறிச்சி—கோமரசங்கடவை. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | தம்பக்காவெல் .. | கே. வேலாத்தை .. | நெல்லுக்குத்தகுந்த காடு .. | 1 | 0 | 0 | 16‡ |
| 2 | குடாகரிவல .. | எம். கோணுத்தை .. | ஷை .. | 1 | 0 | 0 | 16‡ |
| 3 | மீககரவெல .. | கே. மணிக்கிருளை .. | ஷை .. | 1 | 2 | 11 | 26‡ |
| | பிளான் இலக்கம் 5,576. குறிச்சி—திரப்பனே. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | அம்பக்காவெத்த .. | கே. கோணுத்தை .. | தென்னம்தோட்டம் .. | 0 | 1 | 21 | —§ |
| | பிளான் இலக்கம் 5,437. குறிச்சி—ஆலங்கேணி. உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 5 | ஆலங்கேணிபூமி .. | நிலாவெளி றீ. சின்னையாவால் கூட்டியடைத்த நிலம் | தென்னம்தோட்டம் .. | 0 | 2 | 30 | 40 |
| 6 | ஷை .. | பொதுவிற்பனைக்காக .. | சேனைத்தரை .. | 0 | 1 | 28 | 15 |
| | பிளான் இலக்கம் 5,649. குறிச்சி—பெரியகிணியாய். உரித்தாளி—முடிக்குரியது. | | | | | | |
| 1 | முனைச்சேனை ... | எம். சமசுதீன் .. | சாப்பாட்டுச்சாமான் செய்கை பண்ண உவந்தது | 0 | 3 | 25 | 17 |
| 2 | ஷை .. | எம். சின்னமரக்காயரால் உத்தரவுபத்திரத்தின்படி செய்கைபண்ணப்பட்டது | சேனை .. .. | 0 | 2 | 5 | 20 |
| 3 | முனைச்சேனை வளவு .. | ஷை .. | காய்கனித்தோட்டம் .. | 0 | 0 | 23 | 20 |
| 4 | முனைச்சேனை வயல் .. | ஷை .. | நெல்வயல் .. .. | 0 | 3 | 24 | 30 |
| 5 | முனைச்சேனை .. | ஷை .. | சேனை .. .. | 0 | 1 | 15 | 20 |
| 6 | ஷை .. | வீ. மஸ்த்தான் .. | சாப்பாட்டுச்சாமான் செய்கை பண்ண உவந்தது | 1 | 0 | 14 | 17 |
| 7 | ஷை .. | பொதுவிற்பனைக்காய் ... | ஷை .. | 0 | 3 | 32 | 17 |

* விற்கப்படமாட்டாது. † மரங்கள் உண்டு. ‡ ஒடுக்குப்பணம் கட்டத்தவறின்தால் திரும்பவும் விற்பனவுக்குப் போடப்பட்டிருக்கின்றது. § தீர்க்கப்படுவதற்காக.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை அரசாட்சி உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்கள் நில அளவைக் கந்தோர் தலைவரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1921 ம் ஆல் புரட்டாசிமீ 14 ந உ.

கிறேய்ம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பூகொட கிராமத்தில் பிரசித்த சந்தை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பி. எஸ். பிரதமபடத்து இல. 2. குறிச்சி—பூகொட.

